DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.

Case No. STC.No.333/2023

Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | ராஜா (எ) நீதிராஜா |
| Father's Name | : | முத்துமாயன் |
| Village | : | அன்னஞ்சி |
| Taluk | : | தேனி |
| Calling | : | பால்வியாபாரம் |
| Religion | : | இந்து |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13 **day of February 2025.**

புகார்தாரர் ஆஜர். புகார்தாரர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

எதிரி தரப்பில் முதல் விசாரணை:

1) இந்த வழக்கு விபரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும் . புகார்தாரர் எனக்கு பழக்கமா என்றால் பழக்கம் தான். எனது சகோதரி ஜெயபாண்டி சுக்குவாடன்பட்டி கிராமத்தில் கணவனால் கைவிடப்பட்டு , இரண்டு குழந்தைகளுடன் வசித்து வந்தார். அவர் தனது குடும்ப செலவு , தனது மகளின் படிப்பு செலவிற்காக என்னிடம் பணம் ரூ.3,00,000/- கேட்டார். என்னிடம் பணம் இல்லை என்பதால் எனது அக்காவை புகார்தாரரிடம் அறிமுகம் செய்து வைத்தேன் . அவரிடம் எனது அக்கா பணம் கேட்டதால், இரத்த உறவின் சாட்சி, அவரது காசோலை, பத்திர ஜெராக்ஸ் போன்ற ஆவணங்கள் இருந்தால் தான் பணம் கொடுப்பேன் என்று புகார்தாரர் சொல்லிவிட்டார் . புகார்தாரர் சாட்சிகாரரிடமே நிறைய ஆவணம் கேட்பதால் வேறு நபரிடம் பணம் கேட்போம் என்று சொன்னேன். ஆனால் எனது அக்கா அவரசமாக தேவைப்படுவதால் என்னை காசோலை , எனது பத்திர ஜெராக்ஸ் ஆகியவற்றை கொடுக்குமாறு சொன்னார் . நான் என்னுடைய காசோலையை நிரப்பாமல் கையெழுத்து மட்டும் போட்டு , புகார்தாரரிடம் கொடுத்தேன். எனது அக்காவின் ஒன்றரை சென்டு இடத்தை 29.09.2022 அன்று தேனி , சார்பதிவாளர் அலுவலகத்தில் ஈடுகடனாக பதிவு செய்து கொண்டார். அந்த ஈடுகடன் பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன்.

2) எனது அக்கா புகார்தாரரிடம் ரூ .3,00,000/- கடனாக பெற்றார். அதற்கு புகார்தாரர் மாதம் 4% வட்டி கேட்டார் . எனது அக்கா கடனை பெற்றவுடன் புகார்தாரருக்கு மாதம் ரூ .12,000/-ஐ தவறாமல் 6 மாதம் வட்டி கொடுத்தார் . 6 மாதம் கழித்து புகார்தாரர் எனது அக்காவிடம் அசல் பணத்தை திரும்ப கேட்டார் . அவ்வாறு கொடுக்கவில்லை என்றால் 6% வீதம் ரூ .18,000/-வட்டி கேட்டார் . எனது அக்கா ஒரு மாதம் தவணை கேட்டார் . புகார்தாரர் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அடுத்த மாதம் புகார்தாரர் வட்டி கேட்டதில் , எனது அக்கா ரூ.12,000/- கொடுத்தார். அதனை வாங்க மறுத்து புகார்தாரர் பணத்தை தூக்கி போட்டுவிட்டார். தவறான வார்த்தைகளால் எனது அக்காவை திட்டினார் . எனது அக்கா அதுபற்றி என்னிடம் தெரிவித்தார்.

3) நான் அது பற்றி புகார்தாரரிடம் கேட்ட போது , வட்டி கொடுங்கள் அல்லது அசலை கொடுங்கள் என்று அசிங்கமாக திட்டினார் . புகார்தாரர் அசிங்கமாக திட்டியதற்கு தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் எனது அக்கா புகார் அளித்தார். அந்த புகார் தேனி, அல்லிநகரம் காவல்நிலையத்திற்கு வந்த போது , நானும், எனது அக்காவும் விசாரைணைக்கு சென்றோம் . போலீசார் இந்த வழக்கை நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள் . புகார்தாரர் எங்களை என்ன செய்கிறேன் என்று பேசினார் . பொது ஆட்களை வைத்து புகார்தாரரிடம் பேசினோம். அதற்கு அவர் உங்கள் வேலையை பாருங்கள் என்று சொல்லிவிட்டார். ஒரு மாதம் கழித்து கோர்ட்டில் இருந்து சம்மன் வந்தது . நான் புகார்தாரரிடம் எந்த கடனும் வாங்கவில்லை . எனது அக்கா மீது இரண்டு வழக்குகள் புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார் . அந்த வழக்கு தேனி விரைவு நீதிமன்றத்தில் STC No.83/2023 ஆகும். அந்த வழக்கை தனது நண்பர் உமாபதி மூலம் தாக்கல் செய்துள்ளார் . அக்காவுடைய ஈடுகடன் பத்திரத்தை வைத்து தேனி, சார்பு நீதிமன்றத்தில் OS No.270/2023 என தாக்கல் செய்துள்ளார்.

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

C PALANIVELRAJAN

Digitally signed by C PALANIVELRAJAN
Date: 2025.02.13 19:06:54 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.